www.Padasalai.Net www.CBSEtips.in

V12Eco

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
காலாண்டு பொதுத்தேர்வு - 2023

வகுப்பு 12
பொருளியல்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி
அ) ஜே.எம்.கீன்ஸ் ஆ) காரல் மார்க்ஸ் இ) ஆடம் ஸ்மித் ஈ) சாமுவேல்சன்

2) உற்பத்தி காரணியின் செலவின் அடிப்படையிலான NNP
அ) நாட்டு வருமானம் ஆ) உள்நாட்டு வருமானம்
இ) தலைவீத வருமானம் ஈ) சம்பளம்

3) சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது நெகிழ்வு ஆகும்.
அ) தேவையின் ஆ) வட்டியின் இ) மூலதனத்தின் ஈ) அளிப்பின்

4) ஒரு வங்கி என்பது ............
அ) நிதி நிறுவனம் ஆ) கூட்டு பங்கு நிறுவனம்
இ) தொழில் ஈ) சேவை நிறுவனம்

5) சிறப்பு எடுப்புரிமையின் மற்றொரு பெயர்
அ) பங்களவுகள் ஆ) தாள் தங்கம்
இ) தன் விருப்ப ஏற்றுமதி தடைகள் ஈ) இவை ஏதுமில்லை

6) பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை ............
அ) பண சந்தை ஆ) பங்கு சந்தை
இ) அந்நிய செலவாணி ஈ) மூலதன சந்தை

7) தொன்மை கோட்பாடு ............ ஐ ஆதரிக்கிறது.
அ) சமநிலை வரவு செலவு ஆ) சமமற்ற வரவு செலவு
இ) உபரி வரவு செலவு ஈ) பற்றாக்குறை வரவு செலவு

8) மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்
அ) உயர்ந்த பட்சமாக ஆ) மிக மோசமாக
இ) மிகக் குறைந்தபட்சமாக ஈ) மிக நல்ல நிலையில்

9) மிகைப் பெருக்கி என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்
அ) கான் ஆ) R.G.D.ஆலன் இ) J.R. ஹிக்ஸ் ஈ) கீன்ஸ்

10) இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை
அ) வங்கி ஆ) அணு ஆற்றல் இ) மருந்து உற்பத்தி ஈ) காப்பீடு

11) கீழ்வருவனவற்றுள் எது ஓட்ட கருததுரு?
அ) சட்டைகளின் எண்ணிக்கை ஆ) மொத்த சொத்து
இ) மாத வருமானம் ஈ) பண அளிப்பு

12) ஜே.எம்.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக.
அ) நாடுகளின் செல்வம் ஆ) மூலதனம்
இ) பொது கோட்பாடு ஈ) பொது நிதி

13) MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) ஆடம்ஸ்மித் ஆ) ரிக்கார்டோ இ) J.M.கீன்ஸ் ஈ) மால்தஸ்

14) விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது
அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம்
இ) உயர் பணவீக்கம் ஈ) பணவாட்டம்

15) வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
அ) இந்திய ரிசர்வ் வங்கி ஆ) நபார்டு
இ) ICICI ஈ) ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா

16) ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு
அ) 1967 ஆ) 1965 இ) 1972 ஈ) 1997

17) மொத்த தேவை சமம்
அ) C + I + G ஆ) C + S + G + (x−m)
இ) C + S + T + (x − m) ஈ) C + S + T + Rf

18) முதலீட்டில் மாற்றம் = 10 வருமானத்தில் மாற்றம் = 50, பெருக்கியின் மதிப்பு = ?
அ) 2 ஆ) 5 இ) 1 ஈ) 0

19) MV = PT என்ற சமன்பாட்டில் T என்பது
அ) வாணிபத்தின் அளவு ஆ) பணத்தின் சுழற்சி வேகம்
இ) ரொக்க பணத்தின் அளவு ஈ) வங்கி மற்றும் கடன் பண அளவு

20) கீழ்க்காணும் நாடு எது சார்க்கின் எட்டாவது உறுப்பு நாடாக இணைந்தது?
அ) இலங்கை ஆ) ஜப்பான்
இ) வங்காளதேசம் ஈ) ஆப்கானிஸ்தான்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II

7×2=14

குறிப்பு : ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21) பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?
22) நாட்டு வருமானம் கணக்கீட்டில் 'சொந்த நுகர்வு' எவ்வாறு சிக்கலைத் தருகிறது?
23) முழு வேலைவாய்ப்பு வரையறு.
24) இறுதிநிலை சேமிப்பு நாட்டம் வரையறு.
25) நெகிழிப் பணம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
26) கடன் உருவாக்கம் என்றால் என்ன?
27) பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?
28) சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.
29) பற்று அட்டை குறிப்பு வரைக.
30) உலகத்துவம் என்றால் என்ன?

## பகுதி - III

7×3=21

குறிப்பு : ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31) பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.
32) தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக் கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?
33) கீழ்காணுபவற்றை சுருக்கமாக எழுதுக.
அ) பருவ கால வேலையின்மை
ஆ) உடன்பாடில்லா வேலையின்மை
இ) படித்தவர் வேலையின்மை
34) மிகைப் பெருக்கி விளக்குக.
35) பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.
36) இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகளை குறிப்பிடுக.
37) ஐ.எம்.எப் - ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினை குறிப்பிடுக.
38) வாணிக கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டு செலுத்து சமநிலைக்கு இடையேயான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக.
39) பெருக்கியின் மதிப்பு

| MPC | MPS | K |
|---|---|---|
| 0.00 | 1.00 | ? |
| 0.75 | 0.25 | ? |
| 0.90 | 0.10 | ? |

40) இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை யாவை?

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 7×5=35

41) அ) முதலாளித்துவம், சமதருமம் கலப்பு பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.
(அல்லது)
ஆ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.
42) அ) நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரி.
(அல்லது)
ஆ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.
43) அ) மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தி திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?
(அல்லது)
ஆ) வேலையின்மைகளின் வகைகளை விவரி.
44) அ) இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விவரி.
(அல்லது)
ஆ) பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக.
45) அ) நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.
(அல்லது)
ஆ) உள்நாட்டு வாணிகம் பன்னாட்டு வாணிகத்துக்கு இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.
46) அ) தொன்மை கோட்பாடு கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாடுகளை விளக்குக.
(அல்லது)
ஆ) வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகளை குறிப்பிடுக.
47) அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.
(அல்லது)
ஆ) குறிப்பு எழுதுக. அ) சார்க் ஆ) பிரிக்ஸ்

- - - - - - -

Kindly send me your study materials to padasalai.net@gmail.com